மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணிகள் முடிவுற்றதற்குப் பின்னால் இதுபற்றி பரிசீலிக்கப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவனஈர்ப்பு. திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. ம. சின்னசாமி பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

''இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வேளாண்மைத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த முப்பத்தைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை'' நன்றி, வணக்கம்.

6. அறிவிப்பு.

கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)

கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.